முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

60 | T | I

முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2020

First Term Test - Grade 11 - 2020

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I

பெயர் : ..... **நேரம் : 01 மணித்தியாலம்**

கவனிக்க :

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இலக்கம் 01 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (X) அடையாளமிடுக.

பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 01 முதல் 04 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

வரையறுக்கப்பட்ட இலங்கை மொபிடல் கம்பனியானது தனது வாடிக்கையாளர்களுக்கு இணைய வசதியினை பயன்படுத்தி பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பிற சில சேவைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தினையும் வழங்கியுள்ளதுடன், சம்பத் வங்கியானது தனது வாடிக்கையாளர்களுக்கு வங்கிக்குச் செல்லாமல் வங்கியின் கொடுக்கல் வாங்கல்களை வெப்தளத்தினூடாக மேற்கொள்வதற்கான வசதிகளை செய்துள்ளது.

01. வரையறுக்கப்பட்ட இலங்கை மொபிடெல் கம்பனியினால் நிறைவேற்றப்படும் மனித தேவை எது?
(i) உணவு (ii) போக்குவரத்து (iii) தொடர்பாடல் (iv) பொழுதுபோக்கு

02. வரையறுக்கப்பட்ட இலங்கை மொபிடெல் கம்பனியானது உரித்தாகும் வியாபார அமைப்பு வகைக்குப் பொருத்தமான பண்பு
(i) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டமை.
(ii) சட்ட ஆளுமை காணப்படல்.
(iii) நீண்ட ஆயுட்காலம் அற்றது.
(iv) பொதுத்துறை வணிக அமைப்பாகும்.

03. சம்பத் வங்கியினால் வழங்கப்படும் மேற்படி சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட வங்கிச் சேவை பின்வருவனவற்றுள் எது?
(i) தொலைபேசி வங்கிச் சேவை (ii) வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை
(iii) இணைய வங்கிச் சேவை (iv) நடமாடும் வங்கிச் சேவை

04. சம்பத் வங்கியில் மட்டும் பேணிச் செல்லக் கூடிய கணக்கு வகை எது?
(i) சேமிப்பு கணக்கு (ii) நிலையான வைப்புக் கணக்கு
(iii) நடைமுறை கணக்கு (iv) வனிதா வாசனா கணக்கு

பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வினா 05,06 ஆகியவற்றுக்கு விடையளிக்க.

" வாசனா டெல்" தொலைபேசி கம்பனியானது பாடசாலை மாணவர்களுக்கான புதிய இணையத்தள வசதியொன்றினை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது. இதற்கான அனுமதியை கல்வி அமைச்சிடம் பெற்று கல்வி நடவடிக்கைகளுக்கு மட்டுமே இச்சேவையை பயன்படுத்துவது முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

NWP EXAM

www.ikeon.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

05. " வாசனா டெல்" கம்பனி தொடர்பான சரியான கூற்று
(i) பொருள் உற்பத்தி வணிகமாகும். (ii) சேவை உற்பத்தி வணிகமாகும்.
(iii) சமூக சேவை வணிகமாகும். (iv) அரசுக்கு சொந்தமான வணிகமாகும்.

06. கல்வி அமைச்சிடம் அங்கீகாரம் பெறுவது வணிகத்திற்கு ஒரு
(i) பலமாகும் (ii) பலவீனமாகும்
(iii) வாய்ப்பாகும் (iv) அச்சுருத்தலாகும்

07. பங்குடைமை வணிகத்தில் பங்காளர்களுக்கிடையே பிணக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான செயற்பாடு எது?
(i) பிணக்குகளை தீர்ப்பதற்கு நெருங்கிய நண்பர் ஒருவரை ஈடுபடுத்தல்
(ii) பொருத்தமான தலைவர் ஒருவரை நியமித்தல்
(iii) பங்குடைமை வணிகத்தினை பதிவு செய்தல்
(iv) பங்காளர்களிடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளல்

08. கம்பனியானது அதன் பங்குதாரர்களிலிருந்து வேறுபட்டு சுயேட்சையாக இயங்க வேண்டுமாயின்
(i) இயக்குனர் சபை மூலம் நிர்வகிக்கப்படல் வேண்டும்
(ii) கம்பனியின் பெயரை பதிவு செய்தல் வேண்டும்
(iii) பங்குகள் பகிரங்கமாக விற்கப்படல் வேண்டும்
(iv) கம்பனி சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படல் வேண்டும்

09. காசோலையொன்றினை வரையும் போது கவனிக்க வேண்டிய விடயமொன்று,
(i) முடியுமானவரை எதிர்வரும் திகதியொன்றை இடுதல்
(ii) பணம்பெறுபவரின் பெயரை ஆங்கிலத்தில் எழுதுதல்
(iii) காசோலையில் திருத்தங்கள் இருப்பின் அதனை சரி செய்தல்
(iv) பொருத்தமான முறையில் குறுக்குக் கோடிடல்

10. கொழுப்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு குருனாகலில் அமைந்துள்ள கிளை அமைப்பினால் நாளாந்த அறிக்கைகளை அனுப்புவதற்கு பொருத்தமான தொடர்பால் ஊடகம் எது?
(i) தொலைபேசி (ii) வைபர் (Viber) (iii) கடிதம் (iv) மின்னஞ்சல்

11. பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றை தெரிவு செய்தல் தொடர்பில் சரியான கூற்று.
(i) கொழும்பில் இருந்து காங்கேசன்துறைக்கான நகராந்த புகையிரத சேவையினை (Intercity) ஆரம்பித்தல்
(ii) மத்திய அதிவேக நெடுஞ்சாலையினை 2020 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கு பயன்பாட்டிற்கு விடுதல்
(iii) கனிய எண்ணெய் கொண்டு செல்வதற்கு புகையிரத சேவையினை பயன்படுத்தல்
(iv) பயணிகள் பஸ்களில் பயன்படுத்தப்படும் அனாவசிய பாடல்களுக்கு பதிலாக பொருத்தமான சிறந்த பாடல்கள் அடங்கிய இருவெட்டுக்களை (CD) அறிமுகப்படுத்தல்

12. பொருட்களை கொண்டு செல்வதற்கு பாரிய கப்பல்களுக்குரிய பிரதான போக்குவரத்து மூலங்களுக்கான உதாரணங்களைக் காட்டும் விடை எது?
(i) நீர்வழி, டீசல், விமானநிலையம் (ii) டீசல், துறைமுகம், வான்வழி
(iii) துறைமுகம், நீர்வழி, டீசல் (iv) துறைமுகம், வான்வழி, காற்று

13. ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு வியாபாரம் தேவைப்படுவதற்கு முக்கிய காரணம்.
(i) ஒரு நாட்டின் மிகை உற்பத்தியை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு தேவைப்படல்
(ii) உள்நாட்டு வணிகங்களுக்கு வெளிநாட்டு சந்தையொன்றை ஏற்படுத்தல்.
(iii) வெளிநாட்டு சின்னங்களுக்கு உள்நாட்டில் மதிப்பினை ஏற்படுத்தல்
(iv) ஒரு நாட்டின் தேவைக்கு ஏற்ப அந்நாட்டின் உற்பத்தி இடம் பெறாமை.

NWP EXAM
www.ikeau.lk

14. இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை மட்டும் குறிக்கும் தொகுதி,
(i) தேயிலை, துணி, மரப்பலகை, டயர்
(ii) இறப்பர், கனிய எண்ணெய், இயந்திரம், உணவுப் பொருட்கள்
(iii) தைத்த ஆடை, தேயிலை, இறப்பர், டயர்
(iv) சிறு ஏற்றுமதிப் பொருட்கள், இரத்தினக் கல், துணி, மரப்பலகை

15. ஊழியர்களை நிறுவனத்திற்கு சேர்த்துக் கொள்ளல், அவர்களுக்கான ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளல் என்பன முறையே எம்முகாமைத்துவ கருமங்களைக் குறிக்கின்றன.
(i) திட்டமிடல், ஒழுங்கமைத்தல் (ii) திட்டமில், நெறிப்படுத்தல்
(iii) ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல் (iv) ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல்

16. இலக்குச் சந்தையினை குறித்து நிற்கும் கூற்று
(i) சிறப்புச் சந்தையினுள் உடனடி உணவு (Fast Food) விற்பனை செய்தல்
(ii) வீடுவீடாக சென்று தொலைபேசி இணைப்பினை வழங்குதல்
(iii) நீரிழிவு நோயாளிகளுக்கு விஷேடமான பாதணிகளை விற்பனை செய்தல்
(iv) வைபவங்களுக்கான ஆடைகளை விற்பனை செய்தல்

17. பின்வரும் கணக்குகளில் சொத்துக் கணக்குகளை மட்டும் குறிக்கும் விடைத்தொகுதியை தெரிவு செய்க.
A கடன் கொடுத்தோர் கணக்கு க/கு B காசுக் கணக்கு
C காரியாலய உபகரண க/கு D மூலதன க/கு
E கடன் பட்டோர் க/கு
(i) A, B, C (ii) A, B, D (iii) B, C, D (iv) B, C, E

18. வணிகமொன்றின் பொறுப்பு அதிகரிக்கும் கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.
(i) 8000/- பெறுமதியான பொருட்களை 10000/- இற்கு கடனுக்கு விற்றல்
(ii) 12000/- பெறுமதியான பொருட்கள் கடன் கொள்வனவு
(iii) மின்கட்டணம் செலுத்தியது 4000/-
(iv) கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு 3000/-

19. லக்ஷான் வணிகத்தில் 2020/01/01 கணக்கீட்டு சமன்பாடு பின்வறுமாறு

சொத்துக்கள்	=	உரிமை	+	பொருப்பு
120000	=	90000	+	30000

2020/01/02 இல் 12000/- வங்கிக் கடன் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி 2000/- ஆகும். இக் கொடுக்கல் வாங்களின் பின் சரியான கணக்கீட்டு இரட்டைப் பதிவு எது?

	சொத்துக்கள்	=	உரிமை	+	பொருப்பு
(i)	108000	=	78000	+	30000
(ii)	108000	=	90000	+	18000
(iii)	108000	=	80000	+	28000
(iv)	108000	=	88000	+	20000

20. கடன்கொடுத்தோருக்கு 10000/- செலுத்தும் போது 1000/- கழிவாக கழிக்கப்பட்டது தொடர்பில் சரியான இரட்டைப் பதிவு எது?

(i)	கடன் கொடுத்தோர் கணக்கு	வரவு 10000	(ii)	கடன் கொடுத்தோர் கணக்கு	வரவு 10000
	காசுக் க/கு	செலவு 10000		கொடுத்த கழிவு க/கு	செலவு 1000
				காசுக் க/கு	செலவு 9000
(iii)	கடன் கொடுத்தோர் கணக்கு	வரவு 10000	(iv)	கடன் கொடுத்தோர் கணக்கு	வரவு 9000
	பெற்ற கழிவுக் க/கு	செலவு 1000		காசுக் க/கு	செலவு 9000
	காசுக் க/கு	செலவு 9000			

NWP EXAM
www.ikedu.lk

21. வணிகமொன்றில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

A உரிமையாளர் பற்றிய காசு 5000/=

B வணிகத்தின் பாவனைக்காக 500000/= பெறுமதியான மோட்டார் வாகனம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது

C பிரயாண செலவு செலுத்தியது 2000/=

D உரிமையாளர் பற்றிய பொருள் 500/=

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களாவன,

(i) A, B (ii) A, C (iii) B, C (iv) B, D

22 ஆம் 23 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தரவுகளை பயன்படுத்துக.

சில்லறை வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சிலவும் அவற்றிக்கான மூல ஆவணங்கள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.

கொடுக்கல் வாங்கல்		**மூல ஆவணம்**
கொடுத்த சம்பளம் 5000/=	A)	நாட்குறிப்பு கைச்சாத்து
கடனுக்கு கொள்வனவு 4000/=	B)	பற்றுச் சீட்டு
காரியாலய உபகரணம் கடன் கொள்வனவு 60000/=	C)	கொடுப்பனவு கைச்சாத்து
பெற்ற தரகு வருமானம் 2000/=	D)	கொள்வனவு பட்டியல்

22. மேலுள்ள கொடுக்கல் வாங்கள்களுக்கு பொருத்தமான மூல ஆவணங்களை முறையே குறிக்கும் விடைத்தொகுதி எது?

(i) C, D, B, A (ii) C, D, A, B (iii) C,A, D, B (iv) B,D, A, C

23. மேலுள்ள கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு பொருத்தமான மூல ஏடுகளை முறையே காட்டும் விடை எது?

(i) காசுப்புத்தகம், கொள்வனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, காசுப்புத்தகம்

(ii) காசுப்புத்தகம், கொள்வனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு

(iii) காசுப்புத்தகம், பொது நாட்குறிப்பேடு, கொள்வனவு நாளேடு, காசுப்புத்தகம்

(iv) காசுப்புத்தகம், கொள்வனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு, காசுப்புத்தகம்

24. வணிகமொன்றின் சில்லறைக் காசு மீதி 7500/= ஆகும். 2020/01/01 முதல் வசக்கட்டு மீதியை 10000/= வினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2019 டிசம்பர் மாத மொத்த சில்லறைச் செலவுகள் 7100/= ஆகும். 2020/01/01 இல் மீள் நிரப்ப வேண்டிய தொகை எவ்வளவு.

(i) 7100/= (ii) 7500/= (iii) 8100/= (iv) 8500/=

25. வணிகமொன்றில் 2020/01/31 இல் காணப்பட்ட வங்கிக் கணக்கின் செலவு மீதி 3500/= ஆகும். இது வணிகத்திற்கு ஒரு

(i) சொத்தாகும் (ii) பொறுப்பாகும் (iii) வருமானமாகும் (iv) செலவீனமாகும்

26. கடன்பட்டோரான ருவனிடமிருந்து பெறப்பட்ட 25000/= காசோலை வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பின்னர் மறுக்கப்பட்டது தொடர்பில் வங்கியினால் அறிவிக்கப்பட்டது. இதற்குரிய சரியான இரட்டைப் பதிவு

(i) கடன்பட்டோர் க/கு - வரவு 25000 கடன் கொடுத்தோர் க/கு - செலவு 25000

(ii) கடன்பட்டோர் க/கு - வரவு 25000 வங்கிக் க/கு - செலவு 25000

(iii) வங்கிக் க/கு - வரவு 25000 கடன் பட்டோர் க/கு - செலவு 25000

(iv) வங்கிக் க/கு - வரவு 25000 கடன் கொடுத்தோர் க/கு - செலவு 25000

NWP EXAM

www.lkdu.lk

27, 28, 29 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.

ஆசிக் வணிகத்தில் 2020/01/31 இல் வங்கிக் கணக்கு மீதி 32000/= ஆகும். எனினும் வங்கிக் கூற்றின்படி மீதியானது அத்தினத்தில் வேறொரு மீதியைக் காட்டியது. வேறுபாட்டுக்கான காரணங்கள் பின்வருமாறு.

A வைப்பு செய்து வசூலிக்கப்படாத காசோலைகள் 4000/=
B நிலையான கட்டளை காப்புறுதி தவணைக் கட்டண கொடுப்பனவு 6000/=
C கடன்பட்டோரின் நேரடி வைப்பு 2000/=
D வழங்கப்பட்டு தீர்வையாகாத காசோலை 3000/=

27. வங்கிக் கணக்கினை சீராக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய செயற்பாடுகள் மேலுள்ளவற்றில் எவை?
(i) A, B (ii) A, C (iii) B, C (iv) C,D

28. சீராக்கிய வங்கிக் கணக்கு மீதி யாது?
(i) 36000/= (ii) 34000/= (iii) 29000/= (iv) 28000/=

29. வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி யாது?
(i) 27000/= (ii) 28000/= (iii) 37000/= (iv) 38000/=

30. ஹஸன் வணிகத்தின் 2018/01/01 இல் உரிமை 600000/= ஆகும். 2018/12/31 இல் உரிமை 680000/= ஆகும். ஆண்டுகாலத்தில் உரிமையாளர் பற்று 20000/= ஆகும். வணிகத்தினால் ஆண்டிற்காக உழைத்த தேறிய இலாபம் யாது?
(i) 20000/= (ii) 80000/= (iii) 100000/= (iv) 680000/=

31. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் சீராக்கப்பட வேண்டியது
(i) வியாபாரத்தினால் செலுத்தப்பட்ட நீர் கட்டணம் 4000/=
(ii) நிலையியற் கட்டளை காப்புறுதி தவணைக்கட்டண கொடுப்பனவு 3000/=
(iii) பெற்ற வட்டி வருமானம் 4000/=
(iv) வங்கிக் கணக்கில் வைப்பு செய்து வசூலிக்கப்படாத காசோலை 2000/=

32. வங்கிக் கணக்கு மீதி வங்கிக் கூற்று மீதியை விட அதிகரித்து காணப்படுவதற்கு காரணமாக அமைவது,
(i) கடன்பட்டோரின் நேரடி வைப்பு
(ii) வங்கியினால் சேகரிக்கப்பட்ட பங்கிலாப வருமானம்
(iii) வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம்
(iv) வைப்பு செய்து வசூலிக்கப்பட்ட காசோலை

33. வங்கி மேலதிக பற்று எனப்படுவது.
(i) வங்கிக் கணக்கின் வரவு மீதியாகும்.
(ii) வங்கிக் கணக்கு மீதியை விட மேலதிக தொகையொன்றிற்கு காசோலையை வரைந்து பெறப்படும் தொகை
(iii) வணிகத்தினால் பெறப்பட்ட குறுங்கால கடன்
(iv) வங்கிக் கூற்றின் படி செலவு மீதியாகும்

NWP EXAM

www.lkedu.lk

34. காசோலை மூலம் செலுத்தப்பட்ட கட்டிட வாடகை 25000/= இற்கான இரட்டைப் பதிவாக அமைவது

(i) காசுக் க/கு - வரவு 2500/=
கட்டிட வாடகை க/கு - செலவு 2500/=

(ii) கட்டிடக் க/கு - வரவு 2500/=
காசுக் க/கு - செலவு 2500/=

(iii) கட்டிட வாடகை க/கு - வரவு 2500/=
வங்கிக் க/கு - செலவு 2500/=

(iv) வங்கிக் க/கு - வரவு 2500/=
கட்டிட வாடகை க/கு - செலவு 2500/=

35. வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணம்.

(i) நிதி நிலமை கூற்று (ii) வங்கிக் கணக்கு (iii) பரீட்சை மீதி (iv) வங்கிக் கூற்று

36. கடன் கொள்வனவு 40000/= கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு காசுக் கணக்கில் செலவு வைக்கப்படுவதனால்

(i) பரீட்சை மீதியில் 40000/= வேறுபாடு ஏற்படும்
(ii) பரீட்சை மீதியின் வரவுப் பக்க கூட்டுத்தொகையை விட செலவுப் பக்க கூட்டுத்தொகை 40000/= இனால் அதிகரித்து காணப்படும்.
(iii) பரீட்சை மீதியின் செலவுப் பக்க கூட்டுத்தொகையை விட வரவுப் பக்க கூட்டுத் தொகை 40000/= இனால் அதிகரித்துக் காணப்படும்
(iv) மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை

37. அமலுக்கு விற்பனை செய்த 4000/= பெறுமதியான பொருட்கள் கமலின் கணக்கில் பதியப்பட்டமையினால்

(i) பரீட்சை மீதியின் சமப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது
(ii) வரவுப் பக்க மீதி 4000/= இனால் அதிகரிக்கும்
(iii) செலவுப்பக்கம் 8000/= குறைந்திருக்கும்
(iv) பரீட்சை மீதியின் வரவுப் பக்க மீதியும் செலவுப்பக்க மீதியும் சமப்படமாட்டாது

38. கொடுத்த சம்பளம் 3000/= சம்பளக் கணக்கில் பதியப்படவில்லை. இதற்குரிய சீராக்கப் பதிவு

(i) சம்பள க/கு - வரவு 3000/=
காசுக் க/கு - செலவு 3000/=

(ii) சம்பள க/கு - வரவு 300/=
தொங்கல் க/கு - செலவு 300/=

(iii) சம்பள க/கு - வரவு 3000/=
தொங்கல் க/கு - செலவு 3000/=

(iv) சம்பள க/கு - வரவு 6000/=
தொங்கல் க/கு - செலவு 6000/=

39. கொள்வனவுக் க/கு - வரவு 1000/=
தொங்கல் க/கு - செலவு 1000/=

மேலுள்ள திருத்தப் பதிவு பின்வரும் வழுக்களில் எவ்வழுவிற்குரியதாகும்

(i) கொள்வனவு க/கு 1000/= மிகையாக பதியப்பட்டமை
(ii) காசுக் கொள்வனவு 1000/= காசுக் கணக்கில் பதியப்படாமை
(iii) கொள்வனவு க/கு மீதி 1000/= பரீடசை மீதியில் பதியப்படாமை
(iv) கொள்வனவு 1000/= கொள்வனவு கணக்கில் பதியப்படாமை

40. பரீட்சை மீதி வேறுபடும் போது அவ்வித்தியாசம் தற்காலிகமாக உட்படுத்தப்படுவது

(i) மூலதன கணக்கில் (ii) தொங்கல் கணக்கில்
(iii) நிதி நிலமை கூற்றில் (iv) காசுக் கணக்கில்

NWP EXAM
www.ikedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

60 | T | II

முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2020

First Term Test - Grade 11 - 2020

பெயர்..... **வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II** **காலம் : 02 மணித்தியாலம்**

கவனிக்க

முதலாம் வினா கட்டாயமானதாகும், பகுதி I இலிருந்து இரு வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து இரு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க

01. பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

இலங்கையின் சனத்தொகையில் 20% மானோர் வயது முதிர்ந்தோர் ஆவர். (2018 ஆம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கையின்படி) இத்தரவுகளை தனது பிரதேசத்தில் ஆய்வு செய்த சுமாலி பெரேரா என்பவர் தேசிய போஷாக்குடைய மற்றும் சுகாதாரத்திற்கு தேகாரோக்கியமுள்ள உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் உணவகமொன்றை மினோலி திசேராவுடன் இணைந்து "சுமிஹிரி பாரம்பரிய சிங்கள உணவகம்" எனும் பெயரில் ஆரம்பித்தார். முயற்சியாண்மை தொடர்பில் பாடநெறியொன்றை பூர்த்தி செய்திருக்கும் சுமாலியும் உணவுத் தொழிநுட்பம் தொடர்பாக பட்டதாரியான மினோலியும் முறையே 500000/= காசினையும் (சுமாலி), 500000/= பெறுமதியான கட்டிடத்தினையும் (மினோலி) 2020/01/01 ,இல் மூலதனமாக ஈடுபடுத்தினர். அத்திகதியில் 300000/= வங்கிக்கடன் பெறப்பட்டது. உணவகத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் மினோலிக்கும், சந்தைப்படுத்தல் (விநியோகம்) செயற்பாடுகள் சுமாலிக்கும் பகிரப்பட்டது. இரு பிரிவுகளுக்கும் உதவிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஷாமாலி எனும் பயிற்சியற்ற ஊழியர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சுமிஹிரி உற்பத்தியானது முதியோர் மத்தியிலும் தேகாரோக்கியம் பேணும் மக்கள் மத்தியிலும் பிரசித்தம் பெற்றது.

2020 ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.	**(ரூபா)**
2020/01/03 உணவு தயாரிப்பதற்கான பொருட் கொள்வனவு	100000/=
2020/01/04 பொதியிடல் பொருட்களுக்கான செலவு	8000/=
2020/01/05 உணவு தயாரிப்பதற்கான பொருட்கள் கடன் கொள்வனவு	15000/=
2020/01/25 செலுத்திய நீர் கட்டணம்	3000/=
2020/01/26 வங்கிக் கடன் செலுத்தியது (வட்டி 2000/= உட்பட)	10000/=
2020/01/27 செலுத்திய மின் கட்டணம்	4000/=
2020/01/27 செலுத்திய சம்பளம்	20000/=
2020/01/28 விற்பனை வருமானம்	170000/=
2020/01/29 நிமல் தளபாட நிலையத்திடம் கடனுக்கு கொள்வனவு செய்த தளபாடம்	50000/=

2020/01/03 இல் பயிற்சி பெற்ற இன்னுமொரு ஊழியர் ஒருவரை சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான விளம்பரமொன்று வணிகத்தின் வெப் தளத்தினுடாக வெளியிடப்பட்டுள்ளது. 2020/02/01 முதல் வணிகத்திற்காக வங்கி நடைமுறை கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) a) " சுமிஹிரி பாரம்பரிய சிங்கள உணவகம் " எவ்வகை வணிக அமைப்பைச் சாரும்?

b) இவ் வகை வணிக அமைப்பொன்றின் அனுகூலமொன்றினையும் பிரதிகூலமொன்றினையும் குறிப்பிடுக.

(ii) வணிகத்தின் அகச்சூழல் காரணியொன்றையும் புறச்சூழல் காரணியொன்றையும் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்குரிய ஒரு உதாரணத்தினை " சுமிஹிரி பாரம்பரிய சிங்கள உணவகம் " வணிகத்திலிருந்து குறிப்பிடுக. இதற்கு பின்வரும் மாதிரியை பயன்படுத்துக.

NWP EXAM

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(iii) a) விநியோகச் செயன்முறையில் இடைநடுவர் எனும் வகையில் இவ்வணிகமானது எவ்வகை வணிகத்தில் ஈடுபட்டுள்ளது?

b) இவ் வணிகத்திற்கு நடைமுறைக் கணக்கினை ஆரம்பிக்கக் கூடிய வங்கி வகை எது?

(iv) a) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட தொடர்பாடல் முறையொன்றையும் அதற்குரிய ஊடகத்தினையும் குறிப்பிடுக.

b) இச் சம்பவத்திலிருந்து பின்வரும் முகாமைக்கருமங்களுக்குரிய ஒவ்வோர் உதாரணத்தினை குறிப்பிடுக.

- திட்டமிடல்
- ஒழுங்கமைத்தல்

(v) 2020/01/01 இல் " சுமிஹிரி பாரம்பரிய சிங்கள உணவகம் " வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டினை பெறுமதிகளுடன் குறிப்பிடுக.

(vi) a) இவ் வணிகத்தின் மின் கட்டண கொடுப்பனவிற்கான இரட்டைப்பதிவினை (பெறுமதிகளுடன்) குறிப்பிடுக.

b) இவ் வணிகத்தில் 2020/01/31 இல் மொத்த பொறுப்புக்களின் பெறுமதியை குறிப்பிடுக.

(vii) a) 2020/01/29 இல் தளபாடம் கடனுக்கு கொள்வனவு செய்தலுக்கான முதன்மை ஏட்டினையும் மூல ஆவணத்தினையும் குறிப்பிடுக.

b) இக் கொடுக்கல் வாங்கல்களை மூல ஏட்டில் பதிந்து காட்டுக.

(viii) 2020/01/31 இல் காசு மீதியைக் கணிக்க.

(ix) பின்வரும் கணக்கு வகைகளுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலொன்றினை மேலுள்ள சம்பவத்திலிருந்து குறிப்பிடுக.

A சொத்து B பொறுப்பு C செலவீனம் D வருமானம்

(x) 2020/01/31 இல் உரிமையாண்மை தொகையை கணிக்க. (பின்வரும் மாதிரி அமைப்பபைப் பயன்படுத்துக).

2020/01/31 இல் மூலதனம்		xxx
(+) வருமானம்	xx	
(+) மேலதிக மூலதனம்	xx	xx
		xxx
(-) செலவீனம்		(x)
2020/01/31 இல் உரிமை		xxx

பகுதி - i வணிகம்

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க)

02. (i) a) வணிகமொன்றின் பிரதான நோக்கம் யாது?

b) இந்நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு வணிகத்தினால் மேற்கொள்ள வேண்டிய பிரதான கருமம் யாது?

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா? பொய்யானதா? என குறிப்பிடுக.

a) நுகர்வோரின் விருப்பங்களை பூர்த்தி செய்வதினூடாக தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

b) உற்பத்தி பொருட்களுக்கு நியாயமான விலையொன்றை இடுவதன் மூலம் உரிமையாளரின் நோக்கம் பூர்த்தி அடையும்.

c) பொருட்கள் மீது வரி விதிப்பதன் மூலம் வணிகத்தின் செலவீனங்கள் அதிகரிக்கும்

d) தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப விருத்தியின் காரணமாக தற்போது உலகம் ஒரு கிராமம் போல் மாற்றமடைந்துள்ளது.

(iii) அரிசி உற்பத்தியில் ஈடுபடும் வணிகர்கள் தமது உற்பத்தி பொருட்கள் காலங்கடந்த பின்னரும் இரசாயன கலவைகளை சேர்த்து சந்தைக்கு விநியோகிப்பதாக பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

a) பத்திரிகை விளம்பரமானது எவ்வக்கறை செலுத்தும் பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது?

b) மேலுள்ள சம்பவம் இடம்பெறும் போது நுகர்வோரது பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் நிறுவனம் எது?

NWP EXAM
www.lkedu.lk

(iv) குமாரி என்பவர் டிசம்பர் மாதம் தாய்லாந்திற்கு உல்லாச பிரயாணமொன்றை மேற்கொள்ள உத்தேசித்துள்ளார். இதற்காக அவர் " அமா டிரவல்ஸ் " நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளார்.

a) மேலே குமாரி என்பவரினால் நிறைவேற்றிக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மனித தேவை யாது?

b) அமா டிரவல்ஸ் நிறுவனத்தினை பதிவு செய்வதனால் கிடைக்கும் இரு நன்மைகளை குறிப்பிடுக.

03. (i) a) வணிகச் சூழலை பற்றி அறிந்து கொள்வதன் மூலம் பெறத்தக்க நன்மைகள் என்ன?

b) வணிக அமைப்பொன்றினை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்தும் வேறு உரிமையாண்மை தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் யாவை?

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா? பொய்யானதா? எனக் குறிப்பிடுக.

a) கூட்டுறவு சங்கமானது உரிமையின் அடிப்படையில் அரசுடைமையானதாகும்.

b) வியாபார செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வணிகங்களை சிறிய, நடுத்தர, பாரிய அளவு வணிகங்கள் என வகைப்படுத்தப்படும்.

c) இலங்கை போக்குவரத்து சபையின் இலாபம் அரசிற்குரியது.

d) சேமிப்பு கணக்கிலுள்ள பணத்தை மீளப் பெறுவதற்கு வரவு அட்டையினை பயன்படுத்த முடியும்.

(iii) அமதுல்லா என்பவர் மருந்துப் பொருட்களை விநியோகிக்கும் வணிகமொன்றின் முகாமையாளராக இணைந்து கொண்டார். அமதுல்லா தனது செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளார்.

a) அமதுல்லா ஆரம்பிக்கக் கூடிய மிகப்பொருத்தமான வங்கிக் கணக்கு வகை எது?

b) மருந்துப் பொருள் வியாபாரம் தொடர்பில் வணிக வங்கியொன்றின் மூலம் பெறக்கூடிய சேவைகள் 2 ஐக் குறிப்பிடுக.

(iv) அனோமா என்பவர் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு அடிக்கடி கடனட்டையைப் பயன்படுத்துகின்றார். இணையத்தினூடாக பொருட்களை கொள்வனவு செய்யும் போதும் அவர் கடனட்டையைப் பயன்படுத்துகின்றார்.

a) கடனட்டையை பயன்படுத்துவதனால் அனோமா எதிர்கொள்ளக் கூடிய சவால்கள் இரண்டைக் குறிப்பிடுக.

b) கடனட்டையைப் பயன்படுத்தி இணையத்தினூடாக மேற்கொள்ளக் கூடிய கொடுக்கல் வாங்கல்கள் 02 ஐக் குறிப்பிடுக.

04. (i) a) காப்புறுதியில் " இடர்களை ஒன்றிணைத்தல் " என்பதனால் கருதப்படுவது யாது?

b) வெளிநாட்டு வியாபாத்திற்கு உதவும் காப்புறுதி வகைகள் 02 ஐக் குறிப்பிடுக.

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா? பொய்யானதா? என குறிப்பிடுக.

a) வணிகமொன்றின் வெளியக தொடர்பாடலில் இலத்திரினியல் தொடர்பாடல் ஊடகங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

b) ஏற்பட்ட இழப்பிற்கு சமனான தொகையினையே இழப்பீடாக வழங்குவது ஆயுட் காப்புறுதிக்கு பொருந்தாது.

c) காசோலையில் புறக்குறிப்பிடலின் மூலம் காசோலைக்கு மேலதிக பாதுகாப்பு கிடைக்கும்

d) குறித்த கால அட்டவணைப்படி போக்குவரத்தினை மேற்கொள்ளல் புகையிரத போக்குவரத்தின் பிரதிகூலமொன்றாகும்.

(iii) சுஜா என்பவர் தரமான பத்திக் (Batik) சாரிகளை உற்பத்தி செய்வதுடன் அவற்றில் தரமான சாரிகளை நகரத்திலுள்ள கடைகளுக்கு விநியோகம் செய்கிறார்.

a) பத்திக் சாரி உற்பத்தி வியாபாரமானது எவ்வகை வியாபாரமாக கருதப்படும்?

b) சுஜா வணிகத்தில் வாடிக்கையாளர்களை திருப்திபடுத்துவதற்கு பயன்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் கலவை எது?

NWP EXAM
www.lkedu.lk

(iv) குளிர்பான உற்பத்தி வணிகமொன்றில் உற்பத்தி செய்த குளிர்பானங்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட குறைந்த அளவே விற்பனை செய்யப்பட்டிருந்தது.

a) மேற்படி சம்பவத்தில் எதிர்பார்க்கப்பட்ட அளவு பொருட்கள் விற்பனை செய்யபடாமைக்கான காரணங்களை தேடிப்பார்ப்பதற்காக முகாமைத்துவச் செயன்முறையின் எப்படிமுறையினைப் பின்பற்றல் வேண்டும்?

b) மீதியாக உள்ள குளிர்பானங்களை விற்பனை செய்வதற்கு சந்தைப்படுத்தல் கலவையில் மேம்படுத்தல் கலவையினை எவ்வாறு பயன்படுத்தலாம்?

பகுதி - II

(இப் பகுதியில் இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக)

05. (i) a) கணக்கீட்டின் நோக்கம் யாது?

b) வணிகமொன்றின் உரிமை எனப்படுவது யாது?

(ii) பின்வருவன இரு கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டைப் பதிவுகளாகும். அவற்றிற்கு பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களை குறிப்பிடுக.

		ரூபா	ரூபா
a)	கடன் கொடுத்தோர் க/கு - வரவு	12000/=	
	வங்கிக் க/கு - செலவு		12000/=
b)	கடன் பட்டோர் க/கு - வரவு	4000/=	
	விற்பனை க/கு - செலவு		4000/=

(iii) அஹமட் என்பவர் பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை 2020.01.01 இல் ஆரம்பித்தார். முதல் வாரத்தில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

1. மூலதனமாக இட்ட தொகை 100000/=
2. காசுக்கு தளபாட கொள்வனவு 25000/=
3. வங்கிக் கடன் பெற்றது 50000/=
4. பாடசாலை உபகரண கடன் கொள்வனவு 30000/=
5. கொடுத்த சம்பளம் 5000/=

வேண்டப்படுவது,

a) மேலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் விளைவினை குறிப்பிடுக. பின்வரும் மாதிரியினைப் பயன்படுத்துக. 1ஆவது கொடுக்கல் வாங்கல் உதாரணமாகத் தரப்பட்டுள்ளது.

கொடுக்கல் வாங்கல்	சொத்துக்கள்	=	பொறுப்புக்கள்	+	உரிமை
1.	காசு + 100000	=			+ 10000 மூலதனம்
2.					
3.					
4.					
5.					

b) கமல் வியாபாரத்தின் 2020 ஜனவரி மாத சில்லறைக் கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளது. 2020 ஜனவரி 1 இல் சில்லறைக் காசு மீதி ரூபா 400 ஆகும். சில்லறைக் காசு வசக்கட்டு ரூபா 1500 ஆகும்.

1. 2020/01/01 சில்லறைக் காசு மீள் நிரப்பப்பட்டது.
2. 2020/01/02 செலுத்திய தபால் கட்டணம் ரூபா 150
3. 2020/01/05 பிரயாண செலவு செலுத்தியது ரூபா 200
4. 2020/01/15 உபசரிப்பு செலவு செலுத்தியது ரூபா 180
5. 2020/01/28 தபால் கட்டணம் செலுத்தியது ரூபா 100

வேண்டப்படுவது,

மேலுள்ள கொடுக்கல் வாங்கல்களை சில்லறைக் காசேட்டில் பதிவு செய்து 2020.01.31 இல் சமப்படுத்துக.

NWP EXAM
www.lkedu.lk

06. (i) a) வருமானங்களை பதிவு செய்வதற்கான இரட்டைப்பதிவு தத்துவத்தினை குறிப்பிடுக.
b) சொத்தொன்றின் பண்புகள் 2 ஐக் குறிப்பிடுக.

(ii) தைத்த ஆடைகளை விற்பனை செய்யும் சாரா வணிகத்தில் 2020 ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1/5. அமலிடம் கடனுக்கு கொள்வனவு செய்த சிறுவர் ஆடைகள் 20 ஒன்றின் விலை 300/= (வியாபாரக் கழிவு 10%)
1/10. குமாரிடம் காசுக்கு கொள்வனவு செய்த சாரிகள் 50 ஒன்றின் விலை 500/= (வியபார கழிவு 5%)
1/12. நுவனிடம் கடனுக்கு கொள்வனவு செய்த மேற்சட்டைகள் 08 ஒன்றின் விலை 1000/=
1/15. ரங்காவிடம் கடனுக்கு கொள்வனவு செய்த காற்சட்டைகள் 20 ஒன்றின் விலை 250/= (வியாபாரக் கழிவு 10%)
1/20. நாமலிடம் கடனுக்கு கொள்வனவு செய்த இறாக்கைகள் 02 ஒன்றின் விலை 2000/=

வேண்டப்படுவது,

a) கொள்வனவு நாளேட்டினை தயாரிக்க
b) பேரேட்டு கணக்குகளை தயாரிக்க

(iii) சில்லறை வியாபாரமொன்றை நடாத்திச் செல்லும் சமீர் வணிகத்தின் பின்வரும் அட்டவணையை சரியாக பூரணப்படுத்துக.

கொடுக்கல் வாங்கல்	மூல ஆவணம்	முதன்மை ஏடு
01.மோட்டார் வாகன கடன் கொள்வனவு 500000/=	.....	.....
02.....	கொடுப்பனவு கைச்சாத்து	.....
03.....	.....	விற்பனை நாளேடு
04 பெற்ற தரகு வருமானம் 5000	.....	.....

(iv) அமில வணிகத்தில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மீதிகள் கீழ்வருமாறு.

	ரூபா
விற்பனை	60000
கொள்வனவு	35000
சம்பளம்	20000
காப்புறுதி	4000
மூலதனம்	?
காணி	80000
கட்டிடம்	30000
கடன் பட்டோர்	25000
கடன் கொடுத்தோர்	15000

வேண்டப்படுவது,

a) அமில வணிகத்தின் மூலதனத்தை கணிக்க
b) 2019/12/31 இல் உள்ளவரான பரீட்சை மீதியை தயாரிக்க.

NWP EXAM
www.lkedu.lk

07. (i) a) காசோலையொன்றினை கடன் கொடுத்தோருக்கு வழங்கியமையை உறுதிப்படுத்தும் மூல ஆவணம் எது?

b) கடன் பட்டோரிடமிருந்து பெற்று வைப்பிலிட்ட காசோலை மறுக்கப்பட்டமைக்கான இரடடைப் பதிவு யாது?

(ii) ரன்ஜன் வணிகத்தின் 2019 ஜனவரி மாதம் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கு ரூபா 21000 வை மீதியாகக் காட்டியது. அத்தினம் வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றானது வேறோர் மீதியைக் காட்டியது. பின்னர் அதற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

வங்கி அறவிட்ட கட்டணம் 2000/= வங்கிக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை
கடன் கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலை 45000/= வங்கிக் கூற்றில் 38000/= என பதியப்பட்டிருந்தது.
கடன் பட்டோரின் நேரடி வைப்பு 4000/=
வைப்பு செய்து செலவு வைக்கப்படாத காசோலை 12000/=
நிலையியற் கட்டளை காப்புறுதி கட்டண கொடுப்பனவு 3000/=

வேண்டப்படுவது,

a) சீராக்கப்பட்ட வங்கிக் க/கு
b) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(iii) a) கணக்கீட்டில் ஏற்படும் வழுக்களை சீராக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் முதன்மை ஏட்டினையும் அதற்கான மூல ஆவணத்தினையும் குறிப்பிடுக.

b) பரீட்சை மீதியை பாதிக்காத வழுக்கள் 02 ஐக் குறிப்பிடுக.

(iv) ராமன் வணிகத்தில் 2019 ஆம் ஆண்டில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை வித்தியாசமான 4000/= தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. பின்பு கீழ்வரும் வழுக்கல் கண்டுபிடிக்கப்பட்டன.

விற்பனை பட்டியல் 5000/= முழுமையாக ஏடுகளில் விடுப்பட்டிருந்தது.
மின் கட்டண கொடுப்பனவு 4000/= மின் கட்டண கணக்கில் பதியப்படவில்லை
மோட்டார் வாகன திருத்த செலவு 8000/= மோட்டார் வாகன கணக்கில் பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது,

a) தொங்கல் கணக்கு
b) வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள்

NWP EXAM

www.lkedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2020

First Term Test - Grade 11 - 2020

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - விடைப்பத்திரம்

பகுதி I

(1)	3	(11)	3	(21)	4	(31)	4
(2)	2	(12)	3	(22)	2	(32)	3
(3)	1	(13)	4	(23)	4	(33)	2
(4)	3	(14)	3	(24)	3	(34)	3
(5)	2	(15)	3	(25)	2	(35)	4
(6)	3	(16)	3	(26)	2	(36)	4
(7)	4	(17)	4	(27)	3	(37)	1
(8)	4	(18)	2	(28)	4	(38)	3
(9)	4	(19)	4	(29)	1	(39)	4
(10)	4	(20)	3	(30)	3	(40)	2

(1 x 40 = 40 புள்ளிகள்)

பகுதி II

(01) (i) (அ) பங்குடமை வணிகம்
தனியார் துறை வணிகம்
இலாப நோக்க நிருவனம் டுஇடஹரீமுங 01ரூ

(ஆ)

நன்மை	தீமை
❖ அதிக மூலதனம் திரட்டலாம்	❖ நட்டப்பொறுப்பு வரை/ படாது
❖ இலகுவாக ஆரம்பிக்கலாம்.	❖ நீண்ட ஆயுட்காலம் அற்றது.
❖ நட்டம் பலரிடையே பகிரப்படல்	❖ நட்டம் பலரிடையே பகிரப்படல்
❖ பல்வேறு திறன்களைப் பெறலாம்	❖ சட்ட ஆளுமை அற்றது.

(ii)

அகக் கட்சியினர்	உதாரணம்
உரிமையாளர்	சுமாலி / மினோலி
ஊழியர்	தமாலி

புறக் கட்சியினர்	உதாரணம்
வாடிக்கையாளர்	வயது முதிர்ந்த (60 வயதுக்கு மேற்பட்ட) வாடிக்கையாளர் தொகுதிக்கான உற்பத்தி

(iii) (அ) சில்லறை வணிகம்
(ஆ) வணிக வங்கி

(iv) (அ) இலத்திரனியல் - சமூக வலைதளம்
(ஆ) திட்டமிடல் - பயிற்சியுள்ள ஊழியர் ஒருவரை சேர்க்கத் தீர்மானித்தல்.
வங்கி நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்க தீர்மானித்தல்.
ஒழுங்கமைத்தல் - பயிற்சி பெறாத ஊழியர் ஒருவரை சேர்த்துக் கொள்ளல்.
சந்தைப்படுத்தல் கருமங்களை சுமாலிக்கும் உற்பத்திக் கருமங்களை மினோலிக்கும் பகிரப்பட்டிருத்தல்

(v)

சொத்துக்கள்	=	உரிமை	+	பொறுப்பு
+500000(காசு)		+500000(மூலதனம்)		
+500000(கட்டிடம்)		+500000(மூலதனம்)		
+300000(காசு)				+300000(வங்கிக் கடன்)
1300000		1000000		300000

(vi) (அ) மின் கட்டண கணக்கு - வரவு 4000
காசுக் கணக்கு - செலவு 4000

www.lkedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

(ஆ) 357000/-
(300000 + 15000 + 50000 - 8000)

(vii) (அ) பொது நாட்குறிப்பேடு
நாட்குறிப்பு கைச்சாத்து

(ஆ)

பொது நாட்குறிப்பேடு

திகதி	கை.இ	விபரம்	பே.ப	வரவு	செலவு
		தளபாட உபகரண க/கு		50000	
		தம்புள்ள பெர்னிசர் க/கு			50000

(viii)

காசுக் கணக்கு

மூலதனம்	500000	உணவு வழங்கல் பொருட்கள்	100000
வங்கிக் கடன்	300000	பொதியிடல் பொருட்கள்	8000
விற்பனை	170000	நீர்க் கட்டணம்	3000
		வங்கிக் கடன்	10000
		மின் கட்டணம்	4000
		ஊழியர் சம்பளம்	20000
		மீ/செ	825000
	970000		970000

(ix) சொத்து - மூலதனமிட்டது 500000
பொறுப்பு - பெற்ற வங்கிக்கடன் 300000
செலவினம் - சம்பள கொடுப்பனவு 20000
வருமானம் - விற்பனை வருமானம் 17000

(x) 2020/01/01 இல் மூலதனம் 1000000
விற்பனை வருமானம் 170000

(02) (i)(அ) இலாபம் உழைத்தல்
(ஆ) பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி

(ii) (அ) உண்மை (ஆ) பொய் (இ) உண்மை (ஈ) உண்மை

(iii) (அ) சமூகம்
(ஆ) நுகர்வோர் விவகார (பாதுகாப்பு) அதிகார சபை

(iv) (அ) சமூகம்
(ஆ) நுகர்வோர் விவகார (பாதுகாப்பு) அதிகார சபை

www.lkedu.lk